# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,590 — 1958 නොවැම්බර් 21 වැනි සිකුරාදා — 21.11.1958**

11,590 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மற்றைய நியமனங்கள்

இல. 513—1958

இத்தால் சகலருமறிய வேண்டியது யாதெனில் 1955 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வெளியிடப்பட்ட 10,842 எண்ணையுடைய அரசாங்க தகவல் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டும் 81 வது கட்டளையில் உள்ளடங்கியதும் 1946 ம் ஆண்டின் இலங்கை அரசியற் சட்டத்தின் 61 ம் பிரிவின் படி அரசாங்க சேவை அதிகார சபையால் எனக்களிக்கப்பட்டதுமான அதிகாரத்தின் கீழ் இந்தியர் பாகித்தானியர் பிரசா பதிவுப் பதிலதிகாரியாகிய யான் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள இந்தியர் பாகித்தானியர் பிரசா பதிவுத் துணையதிகாரிகளில் ஒவ்வொருவரையும் அவ்வப்பகுதிகளுக்கு 3 ம் பந்தியிற் குறிப்பிட்ட திகதிமுதல் கடமையாற்ற நியமித்துள்ளேன்.

இதற்கு முன்பதாக அவர்கள் கடமையாற்றிய பகுதிகள் அட்டவணையின் 4 ம் பந்தியில் குறிப்பிட்ட திகதி முதல் நடை முறையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| த. பகவதாஸ் .. | இலங்கையின் எல்லாப் பரிபாலனன் பெரும் பகுதிகள் | 1.10.58 .. | 30.9.58 |
| எம். டி. ரி. டி. எஸ். குணவர்த்தன | ,, .. | 1.10.58 .. | 30.9.58 |
| இ. எ. வி. டி. சில்வா | ,, .. | 1.10.58 .. | 30.9.58 |

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகித்தானியர் பிரசா
பதிவுப் பதிலதிகாரி.

587 வது தபாற் பெட்டி,
கொழும்பு,
1958 ம் ஞு கார்த்திகை மீ 12 உ.

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## பாராளுமன்ற வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தல், 1958

வாக்காளர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரதிகள், சம்பந்தப்பட்ட "ஏ", "பீ" என்னும் நாமாவலிகள் பொதுசனப் பார்வைக்கு வைக்கப்படும் இடங்களின் விபரம் குறித்து, இலங்கையிலுள்ள எல்லாத் தேர்தற் தொகுதிகளிலுமுள்ள பதிவு உத்தியோகத்தர்கள் 1958 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 28 ந் திகதி அறிவித்தல்கள் பிரசுரிப்பர். வாக்காளர் இடாப்புக்களின் பிர்திகளும் அதன் சம்பந்தப்பட்ட நாமாவலிகளும் பொதுவாக, கச்சேரியிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோரிலும், தலதாபன அதிகாரிகள் கந்தோரிலும், கிராமத் தலைமைக்காரர் கந்தோரிலும், பொதுசனப் பார்வைக்கு வைக்கப்படும்.

கீழ்வரும் காரணங்களுக்கமையவிருப்பின் ஒரு வாக்காளரின் பெயர் 1958 ம் ஆண்டின் வாக்களார் இடாப்பில் காணப்படும், அதாவது :—

(அ) "பீ" என்னும் நாமாவலியில் பெயர் சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது,

(ஆ) 1957 ம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்க்கப்பட்டும் இவ்வருட திருத்தியமைத்தலில் "ஏ" என்னும் நாமாவலியில் சேர்க்கப்படாதுமிருத்தல்.

குறிப்பு : "பீ" என்னும் நாமாவலி இவ்வ்ருட திருத்தியமைத்தலில் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படவேண்டிய புதிய பெயர்களைக் கொண்டது.

"ஏ" என்னும் நாமாவலி இவ்வருட திருத்தியமைத்தலில் வாக்காளர் இடாப்பிலிருந்து அகற்றிவிட வேண்டிய பெயர்களைக் கொண்டது.

ஒரு வாக்களார் 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் தேதிக்கு முன் சென்ற 18 மாத காலத்துள் எந்த ஒரு தேர்தற் தொகுதியிலும் 6 மாதகாலம் தொடர்ச்சியாக வாசஞ் செய்திருப்பின் வேறுவழியில் வாக்காளராகத் தகுதியிழக்காதிருப்பின் தம்முடைய பெயரை இவ்வருட திருத்தியமைத்தலில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ள உரிமையுண்டு. பெயர்களை வாக்காளர் இடாப்பில் சேர்ப்பிப்பது அல்லது இருக்கவிடப்படுவது சம்பந்தமான எல்லா உரித்துக்கோடல்களும், பெயர்கள் சேர்க்கப்படுவதை அல்லது இருக்கவிடப்படுவதை ஆட்சேபிக்கும் எல்லா முறையீடுகளும் 1958 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 28 ந் திகதிக்கும் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ந் தேதிக்குமிடையில் அனுப்பினால் மட்டுமே சம்பந்தப்பட்ட பதிவு உத்தியோகத்தர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முன்பு குடியிருந்த இடங்களை விட்டு சமீபத்தில் வேறு இடங்களுக்கு மாறியிருக்கும் அனைவரும் வாக்காளர் இடாப்புக்களையும் நாமாவலிகளையும் பரிசீலனை செய்வதில் நன்கு கவனஞ் செலுத்துமாறு விசேஷமாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அவசியமெனக் கண்டால், தங்கள் உரித்துக்கோடல்களை வாக்காளர் இலிபிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள கந்தோரில் கிடைக்கப்பெறும், இதற்கெனவுள்ள, பத்திரத்தில் உரிய காலத்தில், அனுப்புதல் வேண்டும்.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
பாராளுமன்ற தேர்தல் அதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஞு நவம்பர் மீ 18ந் உ.

---

### பாராளுமன்ற வாக்காளர் இடாப்புகளின் திருத்தம், 1958

1 ம் இலக்கத் தேர்தற் தொகுதி—வட கொழும்பு

2 ம் இலக்கத் தேர்தற் தொகுதி—மத்திய கொழும்பு

3 ம் இலக்கத் தேர்தற் தொகுதி—தென் கொழும்பு

4 ம் இலக்கத் தேர்தற் தொகுதி—வெள்ளவத்தை—கல்கிசை

மேற்குறித்த தேர்தற் தொகுதிகளின் வாக்காளர் இடாப்புகளின் திருத்துகையைத் தொடர்ந்து மேற் குறித்த தேர்தற் தொகுதிகளின் ஒவ்வொன்றினதும் தற்போது நடைமுறையிலிருக்கும் வாக்காளர் இடாப்பின் சம்பூரணப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் அதில் நீக்க வேண்டியதும் சேர்க்கப்படவேண்டியதுமான பெயர்களின் நாமாவலிகளும் பொது மக்களின் பார்வைக்கு 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ந் திகதி தொடக்கம் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ந் திகதி வரைக்கும் அலுவலக நேரத்துள் கொழும்பு பதிவுக்காரியகர்த்தர் அலுவலகத்தில் வைக்கப்படும்.

2. அத்துடன் பொது மக்களின் சௌகரியத்திற்காக மேற் கூறப்பட்ட இடாப்புகளினதும், நாமாவலிகளினதும் பகுதிகள் இதே காலத்துள் அலுவலக நேரத்துள் பிறகாட்டியவாறு பார்வைக்கு வைக்கப்படும்.

| பார்வையிடக்கூடிய இடம் | எடுக்கப்பட்ட பாகங்கள் அடக்கும் இடப்பரப்பு |
|---|---|
| விசேஷ கமிஷனர் காரியாலயம், கொழும்பு மாநகர சபைப்பகுதி .. | கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் A முதல் N வரைக்குமுள்ள சம்மதிச்சீட்டும் பகுதிகள். மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் A முதல் Z வைரக்குமுள்ள சம்மதிச்சீட்டிடும் பகுதிகளும் AA, BB, CC, DD ஆகிய, சம்மதிச்சீட்டிடும் பகுதிகளும் கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியின் A முதல் Q வரைக்குமுள்ள சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். வெள்ளவத்தை கல்கிசை தேர்தல் தொகுதியின் A முதல் E வரைக்குமுள்ள சம்மதிச்சீட்டும் பகுதிகள். |
| நகரசபைக் காரியாலயம், தெகிவலை, மௌண்ட்லவினியா .. | வெள்ளவத்தை-கல்கிசை தேர்தல் தொகுதியின் F முதல் U வரைக்குமுள்ள சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| நகரசபைக் கரியாலயம், கொலொன்னுவ .. .. | கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் C முதல் U வரைக்குமுள்ள சம்மதிச்சீட்டிடும் பகுதிகள் |
| கிராமச் சங்கக் காரியாலயம், அம்பதலென்பகல .. .. | கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் சம்மதிச்சீட்டிடும் பகுதி V. |
| கிராமச் சங்கக் காரியாலயம், கோட்டே-கல்கிசை .. .. | வெள்ளவத்தை-கல்கிசை தேர்தல் தொகுதியின் V, W ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், பொறளை .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 23 ம் இலக்கப் பொறளை வட்டாரத்தைக்கொண்ட கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியின் F, G, H ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், சினமன் கார்டின்ஸ் .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 24 ம் இலக்க சினமன் கார்டின்ஸ் வட்டாரத்தை அடக்கியுள்ள கொழும்பு தெற்குத் தேர்தல், தொகுதியின், I, J ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொழும்பு-கோட்டடி .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 10 ம் இலக்க அளுத்கடை வட்டாரம் அடங்கியுள்ள மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் L, M ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், தெகிவலை .. .. | தெகிவலை மௌண்ட்லவினியா நகரசபையைச் சேர்ந்த வட்டாரங்கள் இல. 1 களுபோவில கிழக்கு, இல. 2 களுபோவில மேற்கு, இல. 3 தெகிவலை வடக்கு, இல. 4 தெகிவலை தெற்கு, இல. 5 நிக்கப்பே நெடிமலாவும், இல.7 கவ்டானு, கறகம்பிற்றியா ஆகியவையும். கோட்டே-கல்கிசை கிராமச் சங்கத்தின் வட்டாரங்கள் இல. 12 டிவுலப்பிற்றியா-பெல்லன்தற, இல. 13 பெப்பிலியனுவும், இல.14 அத்திடி ஆகியவையும் அடங்கிய வெள்ளவத்தை-கல்கிசை தேர்தல் தொகுதியின் F, G, H, I, J, K, L, M, P, V, W ஆகிய சம்மதிச் சீட்டும் பகுதிகள். |
| கொழும்பு மகா தபாற் கந்தோர் .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 13 ம் இலக்க கோட்டை வட்டாரத்தைக் கொண்ட மத்திய கொழும்பு தேர்தற் தொகுதியின் Q என்ற சம்மதிச்சீட்டிடும் பகுதி. |
| தபாற் கந்தோர், கிருண்ட்பாஸ் .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 3 ம் இலக்க மாதம்பிட்டிய வட்டாரத்தைக் கொண்ட கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் F, G, H, ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கிருண்ட்பாஸ் .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 8 ம் இலக்க கிருண்ட்பாஸ் வட்டாரத்தையும் 17 ம் இலக்க மாளிகாவத்தை வட்டாரத்தையும் கொண்ட மத்திய கொழும்பு தேர்தற் தொகுதியின் H, I, V, W ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், ஹவலொக் ரவுண் .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 25 ம் இலக்க திம்பிரிகஸ்யாய வட்டாரத்தையும் 27 ம் இலக்க பம்பலப்பிட்டி வட்டாரத்தையும் 28 ம் இலக்க ஹவலொக் ரவுண் வட்டாரத்தையும் கொண்ட கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியின் K, L, M, N, O, P, Q ஆகிய சம்மதிச்சீட்டும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொள்ளுப்பிட்டிய .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 26 ம் இலக்க கொள்ளுப்பிட்டிய வட்டாரத்தைக் கொண்ட மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் CC, DD ஆகிய சம்மதிச்சீட்டும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொட்டாஞ்சேனை .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 4 ம் இலக்க கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்தைக்கொண்ட கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் I, J ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொட்டாஞ்சேனை .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 5 ம் இலக்க கொட்டாஞ்சேனை மேற்கு வட்டாரத்தையும் 6 ம் இலக்க கொச்சிக்கடை வட்டாரத்தையும் கொண்ட மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் A, B, C, D, ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், மருதானை .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 21 ம் இலக்க டெமற்றகொடை வட்டாரத்தையும் 22 ம் இலக்க குப்பியாவத்தை வட்டாரத்தையும் கொண்ட கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் K, L, M, N ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், மருதானை .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 18 ம் இலக்க மருதானை வட்டாரத்தையும் 20 ம் இலக்க மாளிகாகந்த வட்டாரத்தையும் கொண்ட மத்திய கொழும்பின் தேர்தல் தொகுதியின் X, Y, Z, AA, BB ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், மருதானை .. .. .. | கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 19 ம் இலக்க சுதுவெல்ல வட்டாரத்தைக்கொண்ட கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியின் C, D, E ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |

| | |
|---|---|
| தபாற் கந்தோர், மௌண்ட்லவினியா .. | .. தெகிவலை-மௌண்ட்லவினியா நகரசபையிலுள்ள 6 ம் இலக்க மௌண்ட்லவினியா வடக்கு வட்டாரத்தையும் 8 ம் இலக்க மௌண்லவினியா வட்டாரத்தையும், 9 ம் இலக்க வத்தறப்பொல வட்டாரத்தையும், 10 ம் இலக்க ரத்மலானை மேற்கு வட்டாரத்தையும், 11 ம் இலக்க ரத்மலானை வட்டாரத்தையும் கொண்ட வெள்ளவத்தை-கல்கிசை தேர்தல் தொகுதியின் N, O, Q, R, S, T, U ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், முகத்துவாரம் .. .. | .. கொழும்பு மாநகரசபை பிரதேசத்திலுள்ள 1 ம் இலக்க மோதற வட்டாரத்தையும், 2 ம் இலக்க முகத்துவாரம் வட்டாரத்தையும் கொண்ட கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் A, B, C, D, E ஆகிய சம்மதிச்சீட்டும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், புறக்கோட்டை .. | .. கொழும்பு மாநகரசபை பிரதேசத்திலுள்ள 7 ம் இலக்க சென்ற் போல்ஸ் வட்டாரத்தையும் 9 ம் இலக்க நியூ பசார் வட்டாரத்தையும், 11 ம் இலக்க சென்ற் செபஸ்தியன் வட்டாரத்தையும், 12 ம் இலக்க புறக்கோட்டை வட்டாரத்தையும் கொண்ட மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் E, F, G, J, K, N, O, P ஆகிய சம்மதிச்சீட்டும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொம்பனித்தெரு .. | .. கொழும்பு மாநகரசபை பிரதேசத்திலுள்ள 14 ம் இலக்க கொம்பனித்தெரு வட்டாரத்தையும், 15 ம் இலக்க வேக்கந்த வட்டாரத்தையும் கொண்ட மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியின் R, S, T, U ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், கொம்பனித்தெரு .. | .. கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 16 ம் இலக்க குணுப்பிட்டியா வட்டாரத்தைக் கொண்ட கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியின் A, B ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், வெல்லம்பிட்டிய .. | .. கொலொன்னுவ நகரசபையிலுள்ள 1 ம் இலக்க கொலொன்னுவ வட்டாரத்தையும், 2 ம் இலக்க சலமுல்ல வட்டாரத்தையும், 3 ம் இலக்க நாக்காமுல்ல வட்டாரத்தையும், 4 ம் இலக்க வெல்லம்பிட்டிய வட்டாரத்தையும், 5 ம் இலக்க மீற்ரேற்றமுல்ல வட்டாரத்தையும், 6 ம் இலக்க உறுகொடவத்த வட்டாரத்தையும், 7 ம் இலக்க வெதறகொட வட்டாரத்தையும் அம்பதலெண்பகல கிராமச் சங்கத்திலுள்ள 10 ம் இலக்க கிட்டம்பாகுவ கிழக்கு வட்டாரத்தையும், 11 ம் இலக்க கிட்டம்பாகுவ மேற்கு வட்டாரத்தையும், 12 ம் இலக்க கொட்டுவில வட்டாரத்தையும், 13 ம் இலக்க கொட்டுவில மேற்கு வட்டாரத்தையும் கொண்ட கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியின் O, P, Q, R, S, T, U, V ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |
| தபாற் கந்தோர், வெள்ளவத்தை .. | .. கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள 29 ம் இலக்க வெள்ளவத்தை வடக்கு வட்டாரத்தையும் 30 ம் இலக்க வெள்ளவத்தை தெற்கு வட்டாரத்தையும் கொண்ட வெள்ளவத்தை-கல்கிசை தேர்தல் தொகுதியின் A, B, C, D, E ஆகிய சம்மதிச்சீட்டிடும் பகுதிகள். |

3. உரிமை கோரவோ அல்லது ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யவோ யாராவது விரும்பினுல் 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ந் திகதி வெளியாகும் அரசாங்க "கசெற்" பத்திரிகையில் சட்டப்படி பிரசுரிக்கப்படும் அறிவித்தலைக் கவனிக்கும்படி வேண்டப்படுகின்றனர் இவ்வறிவித்தல் அதே தினத்தில் வெளியாகும் புதினப் பத்திரிகைகளிலும் வெளியாகும் சாதனங்கள் பார்வைக்கு வைக்கப்படும் அலுவலகங்களிலிருந்து உரிமை கோரும் அல்லது ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யும் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுக் காரியகர்த்தர் அலுவலகம்,
கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மீ 15 ந் உ.

டி. ஜே. எல். மிஸ்சோ,
பதிவுக்காரியகர்த்தரும் பதிவதிகாரியும்.

---

**4 A ம் மாதிரிப்பத்திரம்**

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்**

**சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள், பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறுக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும் பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி, யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவு
செய்யும் பதிலதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஆடு கார்த்திகை மீ 18 ந் உ.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|
| F 7240—31.7.51 .. | முத்துச்சாமி இராமாயி அம்மாள், முத்தோலியகேனத் தோட்டம், தெல்தோட்டை |
| H 7112/G—21.7.51 .. | கோவிற்பிள்ளை யோன், 136, கொழும்புத் தெரு, கண்டி |
| H 4753—26.5.51 .. | வெள்ளைக்குட்டி கந்தசாமி, மாகெளசாத் தோட்டம், மடுட்கலை |
| H 7463—25.7.51 .. | முத்தையா பிள்ளை கைம்பெண் சிவகாமு அம்மாள், 45, பாஞ்சாலைவத்தை, வத்தேகாமம் |
| K 5953/J—24.5.51 .. | வெள்ளையன் நல்லையா, எல். டி. கே. வெள்ளை ஓயாக் கூட்டம், அற்றன் |
| K 13423—3.8.51 .. | மூக்கன் வீரையா, 88, இந்தியா ஸ்ரோஸ், கொட்டியாக்கலைக் கடை வீதி, போகவந்தலாவை |
| P 6347—17.2.51 .. | கறுப்பன் சுப்பிரமணியம், கிளேட்டேல் தோட்டம், அக்கிறப்பத்தனை |
| P 6735—4.3.51 .. | நாராயணன் இராமு, அல்பியன் தோட்டம், அக்கிறப்பத்தனை |
| Y 5906—14.7.51 .. | கறுப்பையா வீரையா, ஒளியமண்டித் தோட்டம், வதுளை |
| AA 5195—4.8.51 .. | மருதமுத்து சந்தணம், புதிய மகாவெலைத் தோட்டம், இரத்தினபுரி. |

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப்பதிவு
செய்யும் பதிலதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு கார்த்திகை மீ 18 ந் உ.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர்கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| F 1367—4.4.51 .. | க. பெரியண்ணபிள்ளை, செவந்தியாபிள்ளை, மிலகுவத்தைத் தோட்டம், தலத்து ஓயா | தாயம்மாள் (மனைவி), பெரியண்ணன் (மகன்), தைலாம்பாள் (மகள்), இராசாராம் (மகன்), பாலசரசுவதி (மகள்), தெய்வானையம்மாள் (மகள்) |
| F 2018—27.3.51 .. | ஆறுமுகம் பொன்னுச்சாமி, கிட்டுலமுல்லைத் தோட்டம், கலகாக் கூட்டம், கலகா | கண்ணம்மா (மனைவி), சத்தி அல்லது சத்தியம்மா (மகள்) |
| F 4425—14.7.51 .. | முனியாண்டி சந்தணம், உடத்தென்னியா ஊர், மறசானை .. | சந்தணமாரி (மனைவி), பழனியாயி (மகள்), இருளாயி (மகள்), தங்கம்மா (மகள்), சோலையம்மா (மகள்) |
| F 4727—16.7.51 .. | ஆண்டியப்பன் மாரியப்பன், எறின் தோட்டம், கலகா .. | தொட்டிச்சி (மனைவி), கறுப்பையா அல்லது சுப்பையா (மகன்), சின்னப்பிள்ளை (மகள்), சுப்பிரமணியம் (மகன்), இராமாயி (மகள்) |
| F 6481—23.7.51 .. | மாவடிகோயில் தொட்டியப்ப பூசாரியார் வீரப்பபிள்ளை, கைம்பெண் அரவம்மாள், எறின் தோட்டம், கலகா | விசயலெட்சுமி (மகள்), விசுவநாதன் (மகன்), இராசேந்திரன் அல்லது அருணாசலம் (மகன்) |
| F 7298—6.10.50 .. | என். என். நாராயணன்சேவை அல்லது சுப்பையா, "பீல்ட் வியூ" பங்களா, பேராதனை | அங்கூப்பிள்ளை (மனைவி) |
| M 2108/G—16.4.51 .. | யோன் தேவசகாயம் தேவப் பிரியம், பொதுச் சௌக்கியப் பரிசோதகர், புசாப்பிட்டி | அலிஸ் தேவநேசம் (மனைவி), மேபல் நளினிதேவி (மகள்), நிவிலின் செல்வத்தேவி (மகள்), ஞானக்கண் சம்லின் தர்மத்துரை (மகன்) |
| H 584—24.11.50 .. | அருணாசலம் பிள்ளை நல்லதம்பி, 5, மாத்தளைத் தெரு, வத்தேகாமம் | நாகம்மா (மனைவி), இராசேசுவரி (மகள்), சண்முகம், (மகன்), பரமேசுவரி (மகள்) |
| H 1983—19.1.51 .. | வெள்ளையன் சின்னக்கறுப்பன், தியனில்லைத் தோட்டம், மடுட்கலை | முனியம்மாள் (மனைவி), மூக்காயி அல்லது அழகு (மகள்) பேச்சி அல்லது அழகு (மகள்), அழகன் அல்லது பெரியாம்பிள்ளை (மகன்), சின்னையா (மகன்), எலக்கன்னி (மகள்), பாலசுந்தரம் (மகன்) |
| H 6645—18.7.51 .. | மருதமுத்து கந்தையா, பட்டக்கலைப் பிரிவு, நக்கிள்ஸ் கூட்டம், மடுட்கலை | சரசுவதி (மனைவி), இராசரத்தினம் (மகன்), இலெச்சுமி (மகள்), சரோசா (மகள்), மல்லியசுந்தரம் (மகள்) |
| H 8871—1.8.51 .. | அப்துல்லா இபிருகிம், கல்பொடைத் தோட்டம், மடுட்கலை .. | ஆச்சியம்மா (மனைவி), மீரான் பீபீ (மகள்), நாகூர் பிச்சை (மகன்), நாகூர் அம்மா (மகள்), அப்துல் அமீது (மகன்), அமினா அம்மா (மகள்) |
| H 8922—2.8.51 .. | ஆரோக்கியம் சந்தணம், அல்லது இன்னாசிமுத்து, தொடங்கல்லைத் தோட்டம், உறுக்கலை | அற்புதமேரி (மனைவி) |
| H 627/N/H—30.9.50 .. | இராமன் அழகன், கல்பீலிக் கூட்டம், பன்விலை .. | மரியநாயகம் (மனைவி), மைக்கேல் (மகன்), அந்தோனி அந்தோனிமுத்து (மகன்), அந்தோனியம்மாள் (மகள்), அந்தோனிசு மரியம்மாள் (மகள்), அந்தோனிசு தானியல் (மகன்) |
| J 11154—3.8.51 .. | பெருமாள் தேவராசபிள்ளை, 12, கடைவீதி, அப்கொட் .. | வள்ளியம்மை (மனைவி) |
| J 11202—3.8.51 .. | வேதமுத்து என்றி வில்லியம், காட்மோர்க் கூட்டம், மஸ்க்கேலியா | யேசுடியாள் (மனைவி), ஒகஸ்ரின் (மகன்), எலன் அல்லது மேரி செல்லம் (மகள்), கிறித்தோபர் (மகன்), பீற்றர் வில்பிறெட் (மகன்), ஏர்பேட் வால்றடர் (மகன்), லில்லி அற்புதமேரி (மகள்), டோரா (மகள்), விக்ரர் (மகன்) |
| J 11217—30.7.51 .. | அம்மாசி கதிர்வேல், இன்வேரித் தோட்டம், டிக்கோயா .. | மாரியாயி (மனைவி), அசுவத்தம்மா அல்லது பெரியம்மாள் (மகள்), சிவபாக்கியம் அல்லது ஜெயம் (மகள்), தங்கவேல் அல்லது திருநாவுக்கரசு (மகன்), இராசா அல்லது பழனியாயி (மகள்), சுப்பிரமணியன் அல்லது வேலு (மகன்), புவனேசுவரி (மகள்), செல்வம் (மகள்) |
| J 11286—22.7.51 .. | வேலு பெரியசாமி, கெடெசுப் பிரிவு, மொறேக் கூட்டம், மஸ்க்கேலியா | வள்ளியம்மா (மனைவி), தனபாக்கியம் (மகள்), சிவனடியான் (மகன்), சிவநாதன் (மகன்) |
| J 11560—22.7.51 .. | கறுப்பன் முத்துச்சாமி, பார்குறூவ் தோட்டம், மஸ்கேலியா .. | அங்கம்மா (மனைவி) |
| J 11719—29.7.51 .. | முத்து முருகன், கிளெனூக்கித் தோட்டம், மஸ்க்கேலியா .. | ஆராயி (மனைவி), அன்னக்கிளி அல்லது அஞ்சலை (மகள்), கிட்ணசாமி (மகன்), கோவிந்தம்மா (மகள்), சரவணமுத்து (மகன்), அன்னலெட்சுமி (மகள்), முத்துமாரி (மகள்) |
| J 11778—2.8.51 .. | பழனியாண்டி செல்லமுத்து, பிறவுண்லோத் தோட்டம், மஸ்க்கேலியா | பாப்பு (மனைவி), செல்லத்துரை (மகன்), சாம்பசிவம் (மகன்), பத்மாவதி (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| K 2925/J—8.3.51 .. | பிருன்சிசு அந்தோனிமுத்து மரிய சூசை, பிறெஸ்ரன் தோட்டம், அக்கிரப்பத்தனை | சவரிமுத்து (மகன்), மதலேயம்மாள் (மகள்), யேசுதாசன் (மகன்), அந்தோனியம்மா அல்லது மரிய பாத்திமா (மகள்), பிருன்சிசு (மகன்) |
| K 4590/J—23.5.51 .. | நல்ல கறுப்பத்தேவர் இராமத் தேவர் அல்லது இராமசாமி. முத்தையா, 18, பெருந் தெரு, மஸ்கேலியா | மாரியம்மாள் (மனைவி), பத்மநாதன் (மகன்) |
| K 5915/J—24.5.51 .. | இரெங்கசாமி வெள்ளையன் கைம்பெண் மாகப்பன் கதிராயி, எல். டி. கே. வெள்ளை ஓயாக் கூட்டம், அற்றன் | கறுப்பையா (மகன்), ஆறுமுகம் (மகன்) |
| K 5966/J—24.5.51 ... | இராமசாமி கிட்ணன், எல். டி. கே. வெள்ளை ஓயாக் கூட்டம், அற்றன் | பாப்பாத்தி (மனைவி), சுப்பிரமணியன் (மகன்) |
| K 6178/J—31.5.51 .. | இரெங்கன் சின்னன், வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் .. | இராமாயி (மனைவி), முத்துச்சாமி (மகன்), ஆறுமுகம் (மகன்) |
| K 6477/J—31.5.51 .. | சின்னக்கண்ணுவேலு, வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் .. | பொன்னம்மாள் (மனைவி), இராமச்சந்திரன் (மகன்) |
| K 6621/J—31.5.51 .. | வீரன் சிவனாண்டி, மேற் பிரிவு, வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் | சிவனாயி (மனைவி), காமாட்சி (மகள்) |
| K 6701/J—31.5.51 .. | கறுப்பையர் பெரியசாமி, மேற் பிரிவு, வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் | சீதை (மனைவி), இராக்கம்மா அல்லது அழகம்மா (மகள்), கமலம் (மகள்), பாலசுந்தரம் (மகன்), செல்வராணி (மகள்) |
| K 6707/J—31.5.51 .. | பெரிய இரெங்கசாமி சந்தனம், மேற் பிரிவு, வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் | அமிர்தம் (மனைவி), கிருஷ்ணன் (மகன்), துரைச்சாமி (மகன்), இராமசாமி (மகன்), பாக்கியம் (மகள்), செல்வராணி (மகள்) |
| K 9402/J—30.7.51 .. | முத்தையாச் செட்டியார் வடிவேலுச் செட்டியார், வட்டவளைச் சாலை, வட்டவளை | பூரணம்மாள் (மனைவி) |
| K 8689—22.7.51 .. | காளியன் மெய்யன் அல்லது ஆறுமுகம், பிறைட்லன்ட் தோட்டம், போகவந்தலாவை | கறுப்பாயி (மனைவி), கந்தையா அல்லது காளியன் (மகன்) சிவகுரு (மகன்) |
| K 9294—27.7.51 .. | சொக்கலிங்கம் மெய்யப்பன், திரு. கே. ஏ. சின்னையா மேற்பார்த்து, 6 வது தொழிலாளர் கூட்டம், அ. பு. பகுதி நனு-ஓயா | முத்தம்மாள் (மகள்), கறுப்பையா (மகன்), காமாட்சி (மகள்) |
| K 9823—31.7.51 .. | பெருமாள் குழந்தை, அற்றன் வங்கி லிமிரெட், அற்றன் .. | காளியம்மா (மனைவி), வள்ளியம்மா (மகள்), சிவலிங்கம் (மகன்), சுப்பையா (மகன்) |
| K 10167—6.7.51 .. | ஆவடை சுப்பன், போகவானைப் பிரிவு, போகவானைக் கூட்டம், போகவந்தலாவை | மூக்காயி (மனைவி), கதிர்வேலு (மகன்), மாணிக்கம் (மகன்), சந்தனம் (மகன்), மெய்யா (மகள்), பழனியாண்டி (மகன்) |
| K 11219—3.8.51 .. | மாடன் சந்தணம் அல்லது சந்தணம் அலெக்சான்டர் தானியல், மெஸ்ஸேர்ஸ் பிறவுன் அன்ட் கம்பனிலிமிரெட், அற்றன் | லூர்துமேரி அல்லது சந்தணம் (மனைவி), எலிசபெத் பெலிசிட்டி சரசுவதி (மகள்), அருளானந்தம் சாமுவேல் (மகன்) |
| K 12794—4.8.51 .. | ஜெகநாதன் ஜெகநாதன், பினோயாத் தோட்டம், றெசல்லே | செல்லம் (மனைவி), இலெச்சுமிகாந்தன் (மகன்), ஜெயலெட்சுமி (மகள்), சிவபாக்கியம் (மகள்), ஜெகநாதன் (மகன்), சாத்தாயி (மகள்) |
| K 12944—31.7.51 .. | முத்துக்கறுப்பன் பெரிய கறுப்பன், பினோயாத் தோட்டம், றெசல்லே | வேலம்மா (மனைவி), கிருஷ்ணன் (மகன்), கிருஷ்ணவேணி (மகள்), நீலவர்ணன் (மகன்) |
| J 530/K—27.4.51 .. | முனியாண்டி யோன் செல்லையா, நாசனல் கார்டின், கில்ரன், றெசல்லே | வள்ளியம்மா (மனைவி), மனோன்மணி (மகள்), செல்வநாயகம் (மகன்), சுப்பிரமணியம் (மகன்), கனகரத்தினம் (மகன்), விசுவநாதன் (மகன்), உருக்குமணி (மகள்), விவேகானந்தம் (மகன்), நேசம் (மகன்) |
| P 4450/K—30.11.50 .. | கூல் அயினன், பாத்போட் ஆலே, இஞ்செஸ்ரர் கூட்டம், டிக்கோயா | அங்கம்மா அல்லது மருதாயி (மனைவி), மாரியப்பன் அல்லது பிருன்சிசு கிறித்தோபர் அந்தோனி அல்லது அரசன் (மகன்), இராசலெட்சுமி அல்லது மாரியாயி அல்லது றேஸ்மேரி (மகள்), கிருஷ்ணம்மா அல்லது இலெச்சுமி அல்லது தெறசின் மரியிளரா (மகள்), சரசு அல்லது சரசுவதி அல்லது மாக்கிறெட் மரிய லோறு (மகள்), செல்வம்மா அல்லது செல்வம் அல்லது ஜேட்றூட் மரிய செல்வம் (மகள்), ஆனந்தலெட்சுமி (மகள்) |
| N 2482—26.8.50 .. | திருமலை வேலு, மேற் பிரிவு, டண்சிநேன் தோட்டம், பூண்டுலோயா | கறுப்பி (மனைவி) |
| N 7222—13.5.51 .. | சிகாமணி அபிசேகம், லபூக்கெலிப் பிரிவு, லபூக்கெலித் தோட்டம், லபுக்கலே | பாக்கியம் (மனைவி) |
| Y 4229/V—4.7.51 .. | வேலாயுதன் பழனியாண்டி தங்கவேலு, வெவசைக் கூட்டம் வதுளை | பழனியம்மாள் (மனைவி), பரமசிவம் (மகன்), புஷ்பம்மாள் (மகள்), அருணாசலம் (மகன்), வேலாயுதம் (மகன்), யோகலெட்சுமி (மகள்), பரமேசுவரி (மகள்), பழனியாண்டி (மகன்), திருமுருகம் (மகன்) |
| W 3601/V—25.5.51 .. | கோவிந்தன் அண்ணாமலை, கொக்கோக்கலைத் தோட்டம், மடுள்சீமை | தெய்வானை (மனைவி), இலெச்சுமி (மகள்), முருகாயி (மகள்), சிவலிங்கம் (மகன்), மனோன்மணி (மகள்) |
| Y 2699—20.5.51 .. | இராமன் இலெச்சுமன், ஊவாக்கெற்றவலைத் தோட்டம், ஆலி-எல | பாப்பாயி (மனைவி), பெருமாள் (மகன்), சின்னன் (மகன்), கறுப்பாயி (மகள்), தேவமணி (மகள்), தியாகராசா (மகன்), மேகனதாஸ் (மகன்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| Y 2702—20.5.51 | நாராயணன் சுப்பிராயன், ஊவாக்கெற்றவலைத் தோட்டம், ஆலி-எல | மீனாட்சி (மனைவி), சுப்பிரமணியம் (மகன்), பெருமாள் (மகன்), வேலு (மகன்) |
| Y 2789—30.5.51 | இரெங்கன் சின்னையா, 7 வது பிரிவு, ஸ்பிறிங்வலிக் கூட்டம், ஸ்பிறிங்வலி | சிலம்பாயி (மனைவி), பழனியாயி (மகள்), மீனாட்சி (மகள்), பழனிவேல் (மகன்), நடராசா (மகன்) |
| Y 7250—28.7.51 | மூக்கன் தம்பு, குள்ளன் தோட்டம், வதுளை | எல்லம்மா (மனைவி), சின்னம்மா (மகள்), நல்லையா (மகன்), கோபால் அல்லது இராசகோபால் (மகன்), கிருஷ்ணன் (மகன்) |
| Y 7253—28.7.51 | வீராச்சாமி வடிவேல், குள்ளன் தோட்டம், வதுளை | கறுப்பாயி (மனைவி), பொட்டு (மகள்), செல்வம் (மகன்), செல்லையா (மகன்) |
| Y 7279—23.7.51 | வெள்ளைச்சாமி கந்தன், குள்ளன் தோட்டம், வதுளை | சின்னு (மனைவி), வேலாயுதன் (மகன்), பெருமாள் (மகன்), பேச்சாயி (மகள்), பார்க்கவி (மகள்), தாத்தம்மா (மகள்), நடராசா (மகன்) |
| U 1884—27.7.51 | அலோசியஸ் பெனடிக் பெர்னாந்து அல்லது "பி. ஏ." பெனடிக் பெர்னாந்து, 27 உம், 29 உம், புத்தளம் வீதி, குருநாகல் | குழந்தை தெரேசா சின்னராணி (மனைவி), தோமசு யோசன் பீட்டர் யோசேப்பு (மகன்), தோமசு நவிசு நிர்மால் (மகன்), ரொசாரியோ கலிசு பிரியதர்சினி (மகள்), இதல்றீடா அன்ற்நா நீற்று அருமா (மகள்) |
| CC 4090—22.7.51 | நாராயணக்கவுண்டன் சின்னையா, டெபத்கமைக் கூட்டம், அறநாயக்க | மாரியாயி (மனைவி), சின்னம்மா (மகள்), தங்கவேலு (மகன்), தர்மலிங்கம் (மகன்), வேலாயுதன் (மகன்), நாராயணன் (மகன்), ஆனந்தாயி (மகள்), பூங்காவனம் அல்லது அஞ்சலை (மகள்), சத்திவேலு (மகன்) |
| DD 2463—19.4.51 | முத்துவீரன் மருதை, கீழ்ப் பிரிவு, லவன்ற் தோட்டம், எட்டியாந்தோட்டை | மாரியாயி (மனைவி), பழனியாயி (மகள்), வீரமலை அல்லது சின்னமருதை (மகன்), சண்முகம் (மகன்), கணேசன் (மகன்), பாலாயி (மகள்), பாறுவதி (மகள்), ஏழுமலை (மகன்), தெய்வானையம்மா (மகள்), குருசாமி (மகன்), தங்கவேலு (மகன்) |

# நானாவித அறிவித்தல்கள்

## அரசாங்க பிரசுர நிலையம் மூடுதல்

இருப்புத் தொகை சரிபார்ப்பதற்காக 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதி இந்த இலாகாவின் அரசாங்க பிரசுர நிலையமும், பெரிய தபாற் கந்தோரிலிருக்கும் விற்பனை நிலையமும் மூடப்பட்டு விற்பனை நடைபெற மாட்டாதெனப் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

டபிள்யு. எல். பர்னாந்து,
பதில் சமாச்சாரப் பகுதி அதிபர்.

சமாச்சாரப் பகுதி,
கொழும்பு 1,
1958 ம் ஆண்டு நவம்பர் மீ 18ந் உ.

## விசர்நாய்க் கெடுதி

விசர் நாய்களைப்பற்றிய சட்டத்தின் (333 ம் அதிகாரம்) 11 A-ம் பிரிவின் பிரகாரம் வெள்ளவாய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரதான பிரிவின் உள் உடவேரிய தோட்டத்தின் பகுதியில் விசர் நாய்க்கெடுதி இருக்குமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட பகுதியிலுள்ள எந்தப் பிரசித்த இடத்திலாவது, அல்லது றோட்டிலாவது, அல்லது ஊரவர்க்குரிய கட்டிடம், வளவு, தோட்டம் அல்லாத வேறெந்த இடத்திலாவது, கட்டப்பட்டிராமலும் அல்லது ஒருவரால் நடத்திக்கொண்டு போகப்படாமலுங் காணப்படும் எந்த நாயையும் எழுத்துமூலமாக அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கும் எந்த ஆளினாலாவது உடனே கொன்றுபோடப்பட ஏதுவாகும்.

இந்த விளம்பரம் இத்தேதி தொடக்கம் ஆறுமாதகாலம் வரைக்கும் நிலைநிற்கும்.

பீ. பி. வீ. ஏ. ஜே. பி. சேனாரட்ன,
வதுளை மாவட்ட அதிபதி.

பதுளைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு கார்த்திகை மீ .

# மதுபான சட்ட விளம்பரங்கள்

## குருநாகல் பிரிவிலுள்ள குருநாகல் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சாராயத்தவறணை திறப்பதற்கு விளம்பரம்

180, 187, 194, 221, 225, 231 ம் இலக்கங்களையுடைய மதுபரிபாலன அறிவித்தல்களால் திருத்தப்பெற்று 14. 8. 23 ல் வெளியான 9,478 ம் இலக்க அரசாங்க பிரசுரம் பத்திரிகையில் (கெசற்) பிரசுரிக்கப்பட்ட இலக்கக்கட்டளையின் பிரகாரம் குருநாகல் அரசாங்க அதிபர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தத்துவங்கட்கமைய இதன் கீழ் காட்டப்பட்ட அட்டவணையிலடங்கிய திகதி, நேரம், இடம் குறித்த பகுதியில் உள்ள வாக்காளர் இடாப்பிலுள்ள வாக்காளர்களின் தொகையில் 100 க்கு 60 வீதம் சாராயத் தவறணை திறப்பதற்கு சாதகமாய் இருக்கிறார்களோ என்பதை நிச்சயிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

தவறணையின் பெயர் : குருநாகல் சாராயத் தவறணை.

வாக்கெடுப்பு நாளும் திகதியும் : 1958 ம் ஆண்டு மார்கழி மாசம் 19 ம் திகதி காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணிவரையும் பிற்பகல் 1 மணி தொடக்கம் 6 மணி வரையும்.

வாக்கெடுப்பு ஸ்தலம் : குருநாகல் நகரசபை மண்டபம்.

வாக்கெடுக்கும் கிராமம் : குருநாகல் மாநகர சபையின் 2 ம், 3 ம், 5 ம், 6 ம், 8 ம், 9 ம் வட்டாரங்கள்.

ஏ. எல். பெரேரா,
அரசாங்க அதிபர்,

குருநாகல் கச்சேரி,
1958 ம் ஆண்டு கார்த்திகை மீ 8 ம் உ.

### குருநாகல் பகுதியிலுள்ள மாவத்தகம கிராமத்தில் ஒரு சாராயத் தவறணையை மீண்டும் திறப்பதற்காகிய விருப்பு வாக்களிப்பு அறிவித்தல்

180, 187, 194, 221, 225, 231 ஆகிய இலக்கங்களையுடைய மதுபரிபாலன அறிவித்தல் 146, திருத்தப்பட்ட 1923 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 14 ஆம் திகதி வெளியான 7,478 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் (கெசெற்) பிரசுரிக்கப்பட்ட 6 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் குருநாகல் அரசாங்க அதிபர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தத்துவங்களுக்கமைய இதன் கீழ்காணப்பட்ட அட்டவணையிலடங்கிய திகதி, நேரம், இடம், குறித்த பகுதியிலுள்ள வாக்காளர் இடாப்பிலுள்ள வாக்காளரின் தொகையில் அறுபது வீதம் மாவத்தகம சாராயத் தவறணையை மீண்டும் திறப்பதற்கு சாதகமாயிருக்கிறார்களா எப்பதை நிச்சயிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என இவ்வறிவித்தலால் அறியக்கிடக்கிறது.

| தவறணையின் பெயர் | வாக்களிக்கும் திகதியும் நேரமும் | வாக்களிக்கும் நிலையம் | வாக்களிக்கும் கிராமம் |
|---|---|---|---|
| மாவத்தகம சாராயத் தவறணை | 1958 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 12 ஆம் திகதி மு.ப. 8 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை. மீண்டும் பி.ப. 1 மணி தொடக்கம் பி.ப. 6 மணி வரை | றோமன் கத்தோலிக்க பாடசாலை, மாவத்தகம | கொற்றிகாபொல, ஒலியாமுல்ல, றம்பத்த, வெலிகும்புற, அரம்பொல, மாவத்தகம, சீராதுண்ண, மில்லகஹமுலகடே, பல்லேகம, ஹகோற்றே, மெதங்கொட, மத்தேகங்கொட, புவக்வல்லேதெனிய, உடகம, வம்புகங்கொட, எல்லகொன்ன, நாபே, ஜாலேகம, இரத்னுக்கம, இலுக்வெல, தீகனே, தெல்பத்தன, பஹா முந்தன, பம்பே, ஓவத்தேவெல |

குருநாகல் கச்சேரி,
1958 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 8 ஆம் திகதி.

ஏ. எல். பெரேரா,
அரசாங்க அதிபர், குருநாகல் பகுதி.

## விளம்பரம்

1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ணார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மீ 11 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.